# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 20/2012          கற்பகவள்ளி (பிசா4)  தேதி: 02.03.2026.**

**பிசா. 4 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 10ம் பிரதிவாதி பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

இந்த வழக்கில் எனது அண்ணன் செல்லத்துரை, நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை எனது தாயார் சண்முகத்தாய், பாட்டி ஆவுடையம்மாள் ஆகியோர் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு மற்றும் OS No. 47/2015 வழக்கு பற்றிய விபரங்களை தெரிந்து தான் மேற்படி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். 3ம் தபசில் 5, 6 இலக்கு சொத்துக்கள் ஆதியில் காமாட்சி செட்டியர்ர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தகப்பனார் சொல்லி தான் மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். காமாட்சி செட்டியாரிடம் இருந்து ஆவல் நத்தம் கிராமத்தை சேர்ந்த சுப்பா நாயக்கர் வாய்மொழியாக கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் என் தகப்பனார் கூறி தான் எனக்கு தெரியவந்தது என்றாலும் சரிதான். எதிர்வழக்குரை நான் கூறிய விபரங்களின் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். சுப்பா நாயக்கரின் மகன் தான் 13ம் பிரதிவாதி  அய்யப்ப நாயக்கர் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் எனது தந்தை கூறி தான் மேற்படி விபரம் தெரியவந்தது என்றாலும் சரிதான். சுப்பா நாயக்கரின் மகன் தான் 13ம் பிரதிவாதி  அய்யப்ப நாயக்கர் என்பதற்கு இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அய்யப்ப நாயக்கர் மேற்படியார் பெயரில் 61ம் நம்பர் பட்டா ஏற்பட்டு தீர்வை செலுத்தி ஆண்டு அனுபவம் செய்து வந்ததாக கூறும் நிலையில் அய்யப்ப நாயக்கர் பெயரில் உள்ள சாகுபடி அடங்கல், தீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன்.  சாகுபடி அடங்கல், தீர்வை ரசீது தாக்கல் செய்யவில்லை. அய்யப்ப நாயக்கர் தான் அனுபவம் செய்து வந்தார் என்பதற்கு வேறு ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான்

தாக்கல் செய்துள்ள பட்டா எண். 61ல் ஆவல் நத்தம் சுப்பா நாயக்கர் மகன் அய்யப்ப நாயக்கர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.31 ஆவணம் என்பது 07.03.2023 தேதியில் கோட்டாட்ச்சியர் வழங்கிய உத்தரவு என்றால் சரிதான். அந்த உத்தரவு என் தகப்பனார் பெயருக்கு வரப்பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.31 ன் படி அந்த உத்தரவு வழங்க எனது தந்தைதான் மனு கொடுத்ததாக அதில் துலங்குகிறது என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>** 10ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.